# கேகாலை நகர சபை
# கேகாலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கேகாலை நகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 4,667,983 தொகையான கடன்கொடுத்தோர் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்புகள் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2012 சனவரி 01 ஆம் திகதி முத்திரைக் கட்டண வருமான கடன்பட்டோர் ரூபா 6,260,540 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 833,463 தொகையான 16 மோட்டார் வாகனங்களினதும் வண்டி விடயங்களினதும்

பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 608,000 தொகையான டிராக்டர்கள் இரண்டினதும் பெறுமதி ரூபா 676,000 ஆக ரூபா 68,000 ஆல் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கட்டிடங்களை திருத்தியமைப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,516,838 தொகையான காசும் நிலையான சொத்துக்களும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 83 காணி கட்டிடங்களின் பெறுமதியும் மூலதனமாக்கப்பட்டிராமையால் ஐந்தொகையில் காணிகளின் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்பட்டிராத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

12 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 154,923,462 தொகையானதுடன் துணைப் பதிவேடு/ அறிக்கையின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 144,708,822 ஆனமையால் வேறுபாடு ரூபா 10,214,640 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 9,200,138 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,342,929 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,124,729 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

மீதியான ரூபா 69,176 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) சொத்து முகாமைத்துவம்